[10th May 1954

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" A slight verbal alteration is necessary, Sir. Instead of ' permanent tenants ', it may be read as ' permanent tenant '. It should be singular and not plural."

MR. SPEAKER :—" The question is—

' *Add* after the proviso to item (*b*), the following :—

" where any lands including cultivated lands are in the possession of a walawargdar, kayamgenidar, permanent tenant or mulgeni tenant, he shall be liable to pay the surcharge in respect of those lands, notwithstanding any contract to the contrary." ' "

The amendment was put and carried.

Clause 2 as amended was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

* THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Sir, I beg to move—

' *That the Bill as amended be passed into law.*'

" I do not want to make a speech now. We have already discussed the matter elaborately. I thank the hon. Members for co-operating with the Government in getting through this measure."

MR. SPEAKER :—" The question is—

' That the Madras Land Revenue (Surcharge) Bill, 1954, as amended be passed into law.' "

The motion was carried and the Bill as amended was passed into law.

IV.—HALF-HOUR DEBATE *re* STATIONING OF SPECIAL ARMED POLICE IN TANJORE DISTRICT.

MR. SPEAKER :—" Now, we will take up the half-hour debate regarding stationing of Special Armed Police in Tanjore district."

HON. MEMBERS :—" Tomorrow, tomorrow."

MR. SPEAKER :—" I am in the hands of the House. Shall we have it to-day or to-morrow? "

HON. MEMBERS :—" Tomorrow, tomorrow, Sir."

SRI B. K. NALLASWAMI :—" We have the House Committee meeting at 2 p.m., Sir."

* **SRI M. KALYANASUNDRAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, என்றைக்கு இந்த அரைமணி நேர விவாதத்தை வைத்துக் கொண்டாலும் 12½ மணிக்குப் பிறகே இந்த விவாதம் வரமுடியும். நாளையதினம் ஒரு மணி நேர" விவாதம் வேறு இருக்கிறது

10th May 1954]

MR. SPEAKER :—" There is not going to be any voting on this.

" நாளைக்கு இல்லை. வியாழக்கிழமை என்று சொன்னேன். நாளைக்கு செவ்வாய்க்கிழமை தான்."

" Then, we will proceed with the half-hour debate now. I will allow 10 minutes for hon. Member Sri Kandasamy, five minutes for hon. Member Sri Muthiah and five minutes for the hon. the Deputy Leader of the Opposition and ten minutes for the Hon. Minister."

*SRI C. KANDASAMY:—" கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் தஞ்சை ஜில்லாவில் விசேஷ ஆயுதம் தரித்த போலீஸார் வைக்கப்பட்டிருப்பதைப்பற்றி இங்கு விவாதம் நடத்தப்படுகிறது. இன்றைய விவாதத்திற்கு அரசாங்கத்தரப்பிலிருந்தும் பதில் சொல்வார்கள். அன்றியும், அந்தப் பிராந்தியங்களில் அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்காகவே போலீஸ் படை வைக்கப்பட்டிருக்கிறதென்றும் சொல்வார்கள். அது எவ்வளவு தூரம் உண்மை என்பதை நான் சபையின் கவனத்திற்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். தஞ்சாவூர் ஜில்லாவில் அறுவடை எல்லாம் நடந்து முடிந்த பிறகு, வாரம், குத்தகை எல்லாம் சரியான முறையில் கொடுத்து முடிந்தான பிறகு 'அங்கு விவசாயிகள் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளுகிறார்கள். ஆகவே போலீஸ் படையைக் கொண்டுபோய் வைத்திருக்கிறோம்' என்று சொல்வது எவ்வளவு அபத்தமானது என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 12–40 p.m.

" குறிப்பாக அந்த ஜில்லாவிலுள்ள சில நிலப்பிரபுக்கள் மிகவும் மோசமான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதாவது விவசாயிகள் தங்களுக்குள் சங்கம் வைத்துக்கொண்டிருப்பது தவறு என்றும், சங்கம் ஒழிய வேண்டுமென்றும், சங்கத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பலரை பழி வாங்குவோம் என்றும் பகிரங்கமாகச் சொல்லிகொண்டு கடந்த இரண்டு வருஷங்களாகப் பல அட்டூழியங்களைச் செய்து வருகிறார்கள். இது சட்டசபை அங்கத்தினர்களுக்குத் தெரியும். அவர்களுக்குச் சாதகமாக சர்க்காரும் விசேஷ ஆயுதம் தரித்த போலீஸ் பட்டாளத்தையும் அங்கே அனுப்பி வைத்து அங்குள்ள விவசாயிகளுக்கு மிகவும் துன்பத்தைக் கொடுத்து வருகிறார்கள். குறிப்பாக ஏழை ஹரிஜன விவசாயிகளையும், பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த விவசாயிகளையும் சொல்லமுடியாத துன்பத்திற்குள்ளாக்குகிறார்கள். இராக்காலங்களில் சேரிக்குள் நுழைந்து அவர்களை அடித்தும், உதைத்தும், குடிசையைவிட்டு வெளியேற்றியும் சொல்லமுடியாத துன்பத்தை அளித்து வருகிறார்கள் என்பதை சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

" குறிப்பாக வடபாதிமங்கலம் ஜமீந்தாருக்கு பதினாராயிரம் ஏக்கராவுக்குமேல் நிலமிருக்கிறது. சென்ற ஒரு வருஷத்திற்குள்ளாக அவரது பண்ணையில் வேலை செய்துகொண்டிருந்த 387 பண்ணையாட்களில் 270 பண்ணையாட்களுக்குமேல் வேலையைவிட்டு நீக்கியிருக்கிறார்கள். மற்றும் சிலருக்கு வேலையைவிட்டு நீக்கிவிடுவதாகப் பயமுறுத்தி நோட்டீஸும் கொடுத்திருக்கிறார்கள். எல்லாம் எதற்காக ? அவர்கள் விவசாய சங்கத்தில் சேரக்கூடாது என்பதற்காகத்தான். பல விவசாயிகளிடம் 'நாங்கள் இனிமேல் விவசாய சங்கத்தில் சேருவதில்லை' என்று எழுதித் தரச் சொல்லியும் வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சங்கத்திற்காக வேலை செய்யக்கூடியவர்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு வந்து அவர்கள் முன்னிலையில் நிறுத்தவேண்டுமென்றும் உத்திரவு இட்டிருக்கிறார்கள். 1954-ம் ஆண்டில் உலகத்தில் பல பாகங்களில் எப்படி எப்படியோ பல மாறுதல்கள் நடந்து கொண்டிருக்கும் காலத்தில் இந்த மாதிரி அநீதியான முறையில் இவர்கள் நடந்துகொண்டு வருகிறார்கள். முக்கியமாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல நிலப் பிரபுக்கள் இப்படி நடக்கிறார்கள் என்று சொல்ல நான் வருத்தப்படுகிறேன். வளர்ந்து கொண்டே வரும் விவசாய இயக்கத்தை யாராலும் அழித்துவிட முடி

[Sri C. Kandasamy] [10th May 1954

யாது. விவசாய சங்கத்தில் சேரக்கூடாது என்று எத்தனை நாளைக்குத் தடுத்து வரமுடியும்? எத்தனை பேரை தடுக்க முடியுமென்று நான் கேட்கிறேன். அத்தோடு விவசாய சங்கத்தில் சேரக்கூடாது என்று கட்டுப்படுத்த யாருக்குத்தான் அதிகாரம் இருக்கிறது என்றும் கேட்கிறேன்.

"ஏழை விவசாயிகளுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகள் பல. அவற்றையெல்லாம் நான் நூற்றுக்கணக்கில் உதாரணங்களோடு சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல முடியும். குத்தாநல்லூரிலிருந்து 10 மைல் நீளம் கோப்பான கிராமங்கள் பூராவும் ஒரே பெரிய நிலப்பிரபுவுக்குச் சொந்தமானது. அந்த இடங்களில் எல்லாம் விவசாயிகள் சட்டத்தை மீறினார்கள் என்று சொன்னால், அமைதிக்கு குந்தகம் விளைவித்தார்கள் என்று சொன்னால் அதை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அதற்குமாறாக விசேஷ ஆயுதம் தரித்த போலீஸார்கள் மிராசுதார்களுக்குக் கையாட்களாக அவர்கள் அடிக்கச்சொன்ன ஆட்களை அடித்துக்கொண்டிருக்கிறார்கள். சங்கத்தில் சேர்ந்திருக்கக்கூடிய பல விவசாயத் தொழிலாளர்கள் இம்மாதிரியாகப் பழிவாங்கப்படுகிறார்கள். பொதுவாக இன்றையதினம் இருக்கக்கூடிய சூழ்நிலையில் தஞ்சை ஜில்லாவில் விசேஷ ஆயுதம் தாங்கிய போலீஸ் படை இருக்கவேண்டிய அவசியமேயில்லை. ஏற்கெனவேயே சட்டத்தையும், அமைதியையும் நிலைநாட்ட ஆங்காங்கே பல போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. சட்டத்தை மீறிய செயல்கள் செய்பவர்கள் தஞ்சாவூரில் மாத்திரமில்லை, எல்லாயிடங்களிலும் இருக்கிறார்கள். வறுமையின் காரணமாக பலயிடங்களில் திருட்டுக்கள் நடந்துகொண்டேயிருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலும் இதைத்தடுக்க விசேஷ போலீஸ்படை வைக்கவில்லை. ஆனால் தஞ்சாவூர் ஜில்லாவில் மாத்திரம் அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அமைதியைக் காப்பாற்றுவதற்காக இவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே தவிர, யதார்த்தத்தில் இருக்கும் அமைதியான சூழ்நிலையை இவர்கள் தான் குலைத்துக்கொண்டிருக்கிறார்கள். அனாவசியமாக விவசாயிகளை மிராசுதார்கள் பண்ணையிலிருந்து நீக்குவது நியாயமா என்று நான் கேட்கிறேன். அவர்களைக் காப்பாற்றவேண்டியது அரசாங்கத்தின் கடமையில்லையா என்று நான் கேட்கிறேன். வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. சங்கத்தில் சேர்ந்தவர்களை வேலையைவிட்டு நீக்குவதும், பழிவாங்குவதும், அவர்களுக்கு விசேஷ ஆயுதம் தரித்த போலீசார்கள் கையாட்காளாக இருப்பதும் ரொம்பவும் வெறுக்கத்தக்கதாகும். சென்றதுக்கு 15 தினங்களாக வடபாதிமங்கலம் ஜமீனில் நடக்கும் அக்கிரமத்துக்கு கணக்கு வழக்கில்லை. கம்யூனிஸ்டுகள் நியாயமற்ற முறையில் நடந்து கொள்ளுகிறார்கள், கம்யூனிஸ்டு விவசாய சங்கத்தில் சேர்ந்துள்ள இந்த விவசாயிகள் எந்த மாதிரியான முறையில், அநீதியாக நடந்துகொண்டார்கள் என்று அந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் நிரூபித்தால் நாங்கள் நேர்மையை நிலைநாட்ட, நியாயத்தை நிலைநிறுத்த தக்க நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் ஒரு இடத்திலாவது விவசாயிகள் தவறாக நடந்து கொண்டதாக யாரும் சொல்லமுடியாது. அதுமாதிரியாக நடந்துகொள்ளவும் இல்லை. நடந்து கொண்டதாக யாராலும் நிரூபிக்கமுடியாது. அதற்குமாறாக நிலப்பிரபுக்கள் தான் போலீஸ் படையின் உதவிகொண்டு பல அக்கிரமங்கள் செய்து வருகிறார்கள். சேரிக்குள் இராக்காலங்களில் நுழைவது, அங்குள்ள பெண்களை வெளியே இழுத்து வருவது, குழந்தை குட்டிகளுக்கு துன்பத்தை விளைவிப்பது, இவைகளெல்லாம் கொஞ்சம்கூட சகிக்க முடியாதவைகள். உடனடியாக அந்தப் பிரதேசத்திலிருந்து போலீஸ் படையை வாபஸ் வாங்காவிட்டால் பல கொந்தளிப்புக்கள் உண்டாவதற்கு வசதியாக முடியும். குறைந்த பட்ச கூலியை நிர்ணயித்து ஒவ்வொரு விவசாயிக்கும் இவ்வளவு வாரம் கொடுக்கவேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆனால் பலயிடங்களில் மிராசுதார்கள் அம்மாதிரியாகக் கொடுக்க மறுத்து வருகிறார்கள். பூசரங்குடியில் 7-ந் தேதி அன்றும், இடையக்குடியில் 8-ந் தேதியும் போலீஸார் புகுந்து அங்குள்ள பல விவசாயிகளைத் துன்பப்படுத்தியிருக்கிறார்கள். அங்கிருப்பவர்களைக் கைது செய்துகொண்டுபோய் பத்துப் பதினைந்து நாட்கள் வைத்திருந்துவிட்டு அவர்களைக் கோர்ட்டில்

10th May 1954] [Sri C. Kandasamy]

ஆஜர் செய்யாமலேயே விடுதலை செய்திருக்கிறார்கள். எல்லா நடவடிக்கையையும் செக்ஷன் 151-ன்படியே செய்து வருகிறார்கள். குறிப்பாக விவசாய இயக்கத்திற்கே முன்னோடிகளாக இருக்கக்கூடியவர்களுக்கு இவர்கள் செய்யும் அநீதி கொஞ்சநஞ்சமல்ல. நான் ஒரு நிலப்பிரபுக்குச் சொந்தமான தானியத்தை அள்ளிக்கொண்டு போனால் என் மேல் குற்றம்சுமத்தலாம். ஆனால் நான் செய்யும் வேலைக்கு அவர் எனக்கு 55 சத விகிதம் வாரம் தரவேண்டுமென்று கேட்பது குற்றமா? கனம் நிதி மந்திரி அவர்களையே கேட்கிறேன். வாரம் கேட்பது குற்றமா? அது சட்டத்தை மீறிய செயலா? அத்து மீறி களத்திலுள்ள நெல்லை அள்ளினால் அது சட்டத்தை மீறிய செயலாகுமே தவிர எனக்குச் சேரவேண்டிய கூலியைக் கொடு என்று கேட்பது குற்றமாகாது. தங்களுடைய நலனைப் பாதுகாத்துக்கொள்ள ஒரு சங்கத்தை அமைத்துக்கொள்வதும் குற்றமாகாது. காங்கிரஸ் மகாசபையும் இந்த மாதிரியாக சங்கங்கள் அமைத்துக்கொண்டு நேர்மையான முறையில் போராடுவதை ஆதரித்திருக்கின்றது. சென்ற காலத்தில் நானும் காங்கிரஸில் இருந்திருக்கிறேன். பல காங்கிரஸ் கூட்டங்களில் நம் நாட்டுக்குச் சுதந்திரம் வந்தால் ஜமீன்களை ஒழிப்போம், நிலப்பிரபுத்துவ முறையை ஒழிப்போம் என்று அந்தக் காலத்திலேயே பலயிடங்களில் பேசியிருக்கிறோம். இன்றைக்கு விவசாயிகள் தங்களுக்கு 55 சத விகிதம் வாரம் வேண்டுமென்று கேட்கும்போது சர்க்கார் நிலப்பிரபுக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அவர்களுடைய கையாட்களாகப் போலீஸ் பட்டாளத்தை அனுப்பி விவசாயிகளைத் துன்பப்படுத்தி வருகிறார்கள் என்றால் இது நியாயமா என்று கேட்கிறேன். அன்றைக்கே 40 சத விகிதம் வாரம் என்று கனம் ராஜாஜி கொண்டுவந்தபோது திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி போன்ற பிரதேசங்களுக்கு இதனால் எந்தவிதமான நன்மையும் கிடையாது. வேண்டுமானால் திருக்காட்டுப்பள்ளி போன்ற டெல்டா பிரதேசங்களுக்கு அனுகூலமாக இருக்கும் என்று சொன்னேன். ஆனால் நான் சொன்னதை அவர் கேட்கவில்லை. திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி போன்றயிடங்களிலுள்ள விவசாயிகளுக்கு இதனால் 3 சத விகிதம் கூட லாபம் இருக்காதே என்றதற்கு 'அம்மாதிரி இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இம்மாதிரியாக நான் கொண்டுவருகிறேன். இல்லாவிட்டால் நீங்கள் ஏதோ பெரிய வெற்றியை அடைந்துவிட்டீர்கள் போலப் பேசிக்கொள்வீர்கள்' என்று சொன்னார். அதனால்தான் இன்றைக்கு மறுபடியும் இந்தப் பிரதேசங்களில் வாரத்தைப்பற்றிய சர்ச்சை எழுந்திருக்கிறது. தியநூர், கண்டமங்கலம், கோவில்பட்டி போன்ற இடங்களில் நிலப்பிரபுக்குச் சாதகமாக விசேஷ ஆயுதம் தரித்த போலீஸாரை அனுப்பியிருப்பது கொஞ்சம்கூட சரியாகாது. மக்களுடைய அதிருப்தியை இது இன்னும் அதிகரிக்கவே செய்யும். அவர்கள் செய்துகொண்டிருக்கும் அக்கிரமங்கள் கொஞ்சநஞ்சமல்ல. ஆகவே அந்தப் பிரதேசங்களிலிருந்து உடனடியாக அவர்களை வாபஸ் பெறவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

* SRI C. MUTHIAH PILLAI :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்தவிவாதத்தில் கலந்துகொள்வதற்காக தாங்கள் அனுமதியைக் கேட்டவர்களில் நானும் ஒருவன். அதாவது தஞ்சை ஜில்லாவில் என்னுடைய தாலூகாவில் மிராஸ்தார்களைப் பாதுகாக்க விசேஷ போலீஸ் படை வைத்திருப்பதாகக் கூறினார்கள். அப்படி அனுப்பப்பட்ட விசேஷ போலீஸ் எதற்காக போடப்பட்டிருக்கிறதென்று சற்று விளக்க ஆசைப்படுகிறேன். 2–50 p.m.

"விசேஷப் போலீஸை வைத்து விவசாயிகளுக்குத் தொல்லை தருவதாகச் சொன்னார்கள். இந்த விசேஷப் போலீஸ் படை சீர்காழி தாலூகாவிலுள்ள வள்ளுவக்குடி கிராமத்தில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த கிராமத்தில் 10, 18 ஏக்கர் நிலம் உள்ளவர்கள்தான் இருக்கிறார்களேயொழிய பெரிய மிராஸ்தார்கள் யாரும் கிடையாது என்பதை எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் ஒத்துக்கொள்ளவேண்டும். இந்த கிராமத்தில் சேரிகள் நிறைய இருக்கின்றன. இங்கே விவசாயிகள் சங்கத்தை அமைத்துக் கொண்டிருப்பதற்காக மிராஸ்தார்கள் தொல்லை கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது என் என்று தெரிய

வில்லை. மணலி கந்தசாமி அவர்கள் அந்த சங்கத்தை நல்ல முறையில் ஒழுங்காக நடத்திவரலாம். ஆனால் எல்லா அட்டூழியங்களும் நடக்கின்றன என்பதை அதே நேரத்தில் உணரவேண்டும். கடந்த இரண்டு ஆண்டு காலமாக வள்ளுவக்குடி நிலையைப்பற்றி சர்க்காருக்கு பல தடவை புகார் செய்து இருக்கிறோம். தேர்தல் சமயத்தில் அந்த பக்கம் போகக்கூட முடியாது. போனால் அடிப்பார்கள். அதற்காகவே ஓட்டு கேட்கக்கூட போகவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதையெல்லாம் எதிர்க்கட்சி நண்பர்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இன்னும் பல விவசாயிகள் கோயில் நிலங்களை எடுத்துக்கொண்டு குத்தகைத் தகராறு செய்வது, **10, 15** ஏழை விவசாயிகள் ஒன்று சேர்ந்துகொண்டு சிறிய மிராசுகளைத் தாக்குதல், நிலங்களில் நெல்லை அறுத்துக்கொண்டு போவது போன்ற அட்டூழியங்கள் எல்லாம் நடக்கின்றன. இதற்காக பயந்துக்கொண்டே அந்த நிலங்களை எல்லாம் கவனிக்காமல் கோர்ட்டிலே வழக்கு தாக்கல் செய்து இருக்கிறார்கள். இவைகளெல்லாம் சமரச கோர்ட்டுக்கு சென்றும் நிலைமை சீர்படவில்லை. ஆதலால் அங்கு பலர்களின் நன்மைக்காக விசேஷ போலீஸ் படை தருவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் கம்யூனிஸ்டுகள் விவசாயிகளையும் சிறு சிறு மிராசுதார்களையும் சங்கத்தில் சேரும்படி கட்டாயப்படுத்துகிறார்கள். ஆகவேதான் இவைகளையெல்லாம் கவனித்துக் கொள்வதற்காக விசேஷப் போலீஸ் வைக்கப்பட்டிருக்கிறதே தவிர மிராஸ்தார்கள், விவசாயக் குடியானவர்களை அடக்கவேண்டுமென்பதற்காக வைத்திருப்பதாக சொல்வது முற்றிலும் தவறு. இதைத் தோழர் ராமலிங்கமும், வெங்கடேச ஷோளகரும் ஒத்துக்கொள்ளாதபோதிலும் அங்கு இருப்பவர்கள் துன்பம் ஏற்படாமல் அதைத் தடுக்கவும் இந்த விசேஷ போலீஸ் படை விவசாயிகளின் பாதுகாப்பிற்காகவும் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர அவர்களை அடக்குவதற்கு என்று சொல்வது முற்றிலும் தவறு.

" திரு. மணலி கந்தசாமி அவர்கள் இந்த விவசாய சங்கத்திற்குக் காரியதரிசியாக இருந்துவருகிறார்கள். ஆனால் அங்குள்ள விவசாயிகள் பயங்கரமான வகையில் பல தவறான காரியங்களைச் செய்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அந்த இடம் தொழிலாளர் மகாநாட்டை நடத்திய இடம். மணலி கந்தசாமி அவர்கள் மறைமுகமாக வசித்து வந்த இடம். இங்கேதான் இந்த **S.A.P.** வைக்கப்பட்டிருக்கிறது. காரணம் **10, 15** விவசாயிகள் ஒன்று சேர்ந்துகொண்டு **15, 20** எக்கர் வைத்துக்கொண்டிருக்கும் விவசாயியாயிருந்தால் அந்த இடத்தில் தலைகாட்ட விடாமல் துரத்தியடிக்கின்றனர். இதைப்பற்றி திராவிடக் கழகத்தவரான கிருஷ்ணநாயகர் அவர்கள் நேராக வந்து தற்கால முதல் மந்திரி அவர்களிடம் நன்றாக எடுத்துரைத்திருக்கிறார்கள். அங்குள்ள விவசாயிகளையெல்லாம் சங்கத்தில் கட்டாயம் சேரவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள் என்பதை எல்லாம் வருத்தத்துடன் சொல்லுகிறேன். மேலும் நியாயமான முறையிலே சர்க்கார் அல்லது கிராம உத்தியோகஸ்தர்கள் கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலங்களுக்கு கிஸ்தி முதலியவை கேட்டால் கொடுக்கமாட்டோம் என்று சொல்லுகிறார்கள். இதுபற்றி அவ்வப்போது ஜில்லா கலெக்டர்களுக்கும் சர்க்காருக்கும் பல முறை எழுதியிருக்கிறோம். அந்த முறையிலே விவசாயிகளுடைய பக்கதுணைக்காக இந்த விசேஷ போலீஸ் படை அங்கு வைத்திருப்பது என்பதை தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்."

12–55 p.m. SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, விசேஷ போலீஸ் படை தஞ்சையில் வைக்கப்பட்டிருக்கும் விஷயம்பற்றி நேற்று பேசுகிற சமயத்தில் தஞ்சை ஜில்லாவில் விவசாயிகள் பலாத்காரத்தில் இறங்குவதற்கு தயார் செய்துக்கொண்டிருக்கிறார்கள் ; இதை தடுப்பதற்காக விசேஷ போலீஸ் படை வைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார். இப்போது பேசிய காங்கிரஸ் அங்கத்தினர் ஸ்ரீ முத்தைய்யா பிள்ளை தங்களுக்கு தொல்லை தரும் விதத்தில் விவசாயிகள் நடந்துகொண்டார்களென்று சொன்னார். போலீஸ் பாதுகாப்பு இல்லாவிட்டால் கலகம் ஏற்படும் என்று பிரசாரத்திற்காக சொல்லுகிறார்கள். இரண்டும் பிரசாரம்தான். மணலி கந்தசாமி சொல்வதைப்போல் விவசாயிகள் யாராவது அக்கிரமமாக நடந்துக்கொண்டால் அவர்கள் மீது

10th May 1954] [Sri M. Kalyanasundram]

நாங்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்வோம். விவசாயிகள் அக்கிரமமாக நடப்பதை சர்க்காருக்கு நாங்கள் ஆதரிக்கமாட்டோம் என்பதை உங்கள் மூலமாக சர்க்காருக்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்க விரும்புகிறேன். அங்கு உண்மையில் நடந்தது என்ன என்பதை விருப்பு வெறுப்பின்றி எதிர்கால நன்மையையும், கட்சி நன்மையையும் உத்தேசித்து ஆலோசனை செய்யவேண்டும் என்று கனம் முதல் மந்திரி அவர்களையும் நிதி மந்திரி அவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் முதல் மந்திரி அவர்கள் காங்கிரஸ் கட்சியை பலப்படுத்தவேண்டுமென்று நல்ல எண்ணம் உடையவர். ஆதலால் ஒரு பாரபட்சமற்ற விசாரணை நடத்துவதற்கு, கனம் காமராஜ் அவர்களும் நிதி மந்திரி அவர்களும் ஒத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"விவசாயிகள் கலகம் செய்வதற்கோ ஆயுதம் தாங்குவதற்கோ தயாராய் இல்லை. சுத்த அறிவற்ற முட்டாள்தனமான போக்கு விவசாயிகளிடம் இல்லை. ஹரிஜன விவசாயிகள், பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த விவசாயிகள் எல்லோரும் இச்சங்கத்தினால் ஒற்றுமை அடைந்திருக்கிறார்கள். இது தான் சில மிராசுதார்களுக்கு பிடிக்கவில்லை. மணலி கந்தசாமி விவசாய சங்க காரியதரிசி. இந்த வருஷம் சங்கத்தில் ஒரு லக்ஷம் அங்கத்தினர்கள் ஜாதி ஹிந்துக்களும் ஹரிஜனங்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள். இப்பொழுது இவர்களிடையே நிலவும் ஒற்றுமையைக் குலைப்பதற்காக பணக்காரர்கள், நிலப் பிரபுக்கள் ஆதரவு கொடுக்கவேண்டும் என்று கிராமம் கிராமமாய் போய் விவசாய சங்கத்தை ஒழிக்கப்பாடுபடுகின்றனர். விசேஷ ஆயுதந் தாங்கிய போலீஸ் படையானது அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காக இருக்கிறது என்று சொல்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. அமைதி இருக்கவேண்டும்; ஒழுங்கு இருக்கவேண்டும்; உற்பத்தி பெருகவேண்டும்; நாட்டில் சுபிட்சம் இருக்கவேண்டும் என்பதுதான் சர்க்கார் கட்சியினரின் நோக்கமாக இருக்கவேண்டும். இது விஷயத்தில் சர்க்கார் கட்சியினர் எவ்வளவு தூரம் விரும்புகிறார்களோ அவ்வளவு நாங்களும் விரும்புகிறோம். அமைதி எப்படி இருக்க முடியும்? விசேஷ ஆயுதந் தாங்கிய போலீஸ்காரர்களைக்கொண்டு துப்பாக்கியைக் காண்பித்து ஜனங்களை அமைதியாக இருங்கள் என்று நிர்ப்பந்தப்படுத்தினால் ஜனங்கள் அமைதியாக இருக்கமுடியுமா? மிராசுதார்கள் விவசாயிகளைப் பழிவாங்க மாட்டார்கள். பட்டினி கிடக்கும்படிசெய்யமாட்டார்கள் என்ற ஒரு அமைதியானது மக்களிடையே இருந்தால் தான் இது சாத்தியமேயொழிய விசேஷ ஆயுதந் தாங்கிய போலீசாரைக்கொண்டு பயமுறுத்தி, விளைந்தாலும் விளையாவிட்டாலும் குத்தகையைக் கொடுக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தினாலும், நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தினாலும் ஏன் என்று கேட்கக்கூடாது என்ற பலாத்காரத்தை சர்க்கார் உபயோகித்தால் அமைதி இருக்கமுடியாது என்று சர்க்காருக்கு தெரிவித்துக்கொண்டு, இது விசேஷமாக விசாரணை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Mr. Speaker, Sir, in view of the allegations made by the first speaker, the hon. Member Sri C. Kandasami, I wish to state the policy of this Government with regard to kisans, kisan sangams and the kisan agitation. As far as this Government is concerned, it is not against the formation of kisan sangams but, at the same time, we also want to see that nobody is forced by threat or intimidation to join the kisan sangams. If, today, as it has been claimed by the hon. the Deputy Leader of the Opposition, there are about a lakh of members in these kisan sangams, it has also to be seen how these one lakh of members were enrolled. I have known cases where threats of social boycott and other forms of intimidation and coercion have been used for the purpose of making the tenants and agriculturists join these sangams." 1 p.m.

[10th May 1954

SRI M. KALYANASUNDRAM :—" Sir, I question this statement. I am prepared for an enquiry."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, it is a very cheap way of answering a charge. While we are not against anybody joining any sangam we have also, at the same time, to safeguard persons who do not want to join any sangam and wish to carry on their peaceful occupation. If anything is to be done for the purpose of forcing these people to join any particular sangam, we have to take sufficient measures to protect them against the use of force, coercion and intimidation.

" Then, as regards the share which is due to the tenants, it is not as if the 45 per cent provided in the Tanjore Tenants and Pannaiyal Protection Act of 1952 is a fixed one and is not liable to any change. Taking into consideration the various circumstances prevailing in the State we have fixed the percentage at 45 and we are not against any agitation in a constitutional and peaceful manner to be carried on for the purpose of increasing the percentage of the tenant's share. But, if force is to be used or methods which are unlawful are to be followed for the purpose of getting this share increased, this Government have to step in and see that there are no breaches of the law and that people do not take to unlawful or unconstitutional methods for enforcing these rights. For example, we did not bring the Tanjore Tenants and Pannaiyals' Protection Act simply because of any pressure or agitation on the part of the tenants but because we felt the necessity for it and the justness of the cause and that is the reason why we straightaway fixed 45 per cent as the tenants' share. There is absolutely no necessity for this agitation for increasing the tenants' share to 55 per cent. Even at the very beginning, it was promised that, if only the Tenants and Pannaiyals' Protection Act was allowed to be worked properly and peacefully for a period of two years, the question of increasing the tenants' share would be considered and the Government would take the necessary steps to do so. But the Communists are not satisfied with this because they should show to the people that it was not the Government who gave this 45 per cent as the share of the tenant and that the Government were also not going to give the tenants 55 per cent as their share. They want to show that because of the agitation carried on by the Communist Party the tenants got 45 per cent as their share and that, if in the future they got 55 per cent as their share, it will not be so because the Government want to do justice by the tenants but it will also be due to the agitation carried on by the Communist Party. It is in this context that the present atmosphere has been created in the Tanjore district. Even though the leaders of the Communist Party may say that they do not take to paths of violence or adopt unconstitutional methods, they are not there at all times to control this movement. This is the reason why, in spite of them, in very many places, things have gone out of bounds and unlawful and violent methods have been resorted to. We have got reports about them.

10th May 1954] [Sri C. Subramaniam]

" What was the real situation prevailing in the Tanjore district which led to the stationing of the Special Armed Police in that district? It is not as if we are the enemies of the tenants. We are the best friends of the tenants in spite of the contrary assertions made by the members of the Communist Party who are leading the tenants in the wrong path, so much so, it is difficult even for the Government to make the necessary reforms and to create a peaceful atmosphere wherein it will be possible for the Government to take further steps.

" We have stated in the Tanjore Tenants and Pannaiyals Protection Act that it will not be applicable to the small landholders with less than one *veli* and that in respect of others we have fixed the tenants' share as 40 per cent. We have also laid down the wages of the labourers in the Act. What is it that was resorted to for getting an increased *waram* and increased wages? Here is the harvest time and the crops have to be harvested within a particular time as otherwise they would go to waste. Even a week's delay would mean the loss of the entire produce as all the paddy would fall down and go to waste. At this critical time, the tenants said that the landlords should agree to give them higher wages and that otherwise there would not be any harvesting. Can an agriculturist keep quiet simply because at the critical moment threats are used and demands are made for higher wages, wages higher than that fixed under the Tanjore Tenants and Pannaiyals Portection Act itself? In these circumstances, the landlords said: ' If you have got any disputes you had better go to the Court. There is enough provision in the Act to entitle you to compensation if, we, the landlords, have committed any wrong.' At this juncture, the landlords could not afford to leave the paddy unharvested which would be neither beneficial to them nor to the tenants. They had, therefore, to bring in outside labour and harvest the paddy. At this, the kisans who were armed—we have received reports accordingly—went there and threatened that the outside labour should not harvest the paddy. What was the position of the Government? As a Government, we are interested in seeing that as much of the produce as we are able to obtain from these lands was harvested as otherwise it would neither benefit the tenants nor the mirasdars. The Government had to see that harvesting was done apart from the rights *inter se* as between the two parties, as between the labourer and the tenant and as between the labourer and the landlord or as between the tenants and the landlord. The Government had to safeguard the harvest as such and, therefore, in order to create a peaceful atmosphere and in order to see that unlawful and violent methods were not adopted by the kisans for the purpose of getting higher wages by preventing outside labour being brought into harvest, the Special Armed Police were sent there. It is only for this purpose they were sent there and there is nothing wrong in it.

" Sir, I can also say, if unlawfully for no reason whatsoever, a labourer is excluded from carrying out the harvest, even though

[Sri C. Subramaniam] [10th May 1954

he did not actually harvest the crop, he is entitled to go to a court and demand from his employer his entire wages and the court will be bound to give him his wages, if his case is proved. Therefore, the labourer does not lose anything if he has been unlawfully, without sufficient reason, excluded from harvesting. He is entitled to get the entire compensation from the landlord.

" So also, in respect of the tenants, I do not say that asking for a share of 55 per cent of the produce is anything unconstitutional or unlawful. They are entitled not only to 55 per cent but may even ask for 75 per cent. The tenants are entitled even to say that the mirasdar has no place at all and he has got to be effaced. They have not only got the right to say so but they have got the right to do propaganda for it also. But, what is it that is happening now? 45 per cent is fixed as the share of the tenant and he is bound to give 50 per cent to the mirasdar under the Act. What the tenants actually do now is to harvest the crops and take them away forcibly threatening the landlords and without giving them their share. This is against the law. I do not mind their doing any amount of propaganda for getting a 55 per cent share for themselves. We, as a Government, are bound to take notice of such propaganda and, if it is felt that the claim is just, justice has got to be done and the share has got to be increased in some form or other. In spite of and apart from the Communist Party's attitude, we will do it on its own merits and not because the Communist Party is agitating for it or because we are also afraid that if we do not do it something else will occur. We will do so because of the justness of the cause; we will consider the whole matter and will do the needful when the time comes."

* SRI S. RAMALINGAM :—" Point of order, Sir, '45 வாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது' என்று கனம் மந்திரி அவர்கள் அடிக்கடி சொல்லுகின்றார்கள். ஆனால், தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்திலே 40 வாரந்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாற்பத்தைந்து வாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள் என்று தவறாகப் புரிந்துகொண்டு விவசாயிகள் கலகக் கொடியை உயர்த்தி விடக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்லுகிறேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I am glad the hon. Member has corrected me. I meant only the percentage that is found in the Act whatever it may be. I thank the hon. Member for the correction he has made. Perhaps, we intended to make it 45 and the hon. Member reduced it to 40 per cent. (Laughter.)

" It was only in this context that the Government had to send the Special Armed Police to Tanjore district. I asked an hon. Member when he made charges on the floor of this House that there had been excesses on the part of the Police to give me concrete cases so that I could make necessary enquiries. Still I am awaiting those specific instances. There is no use in simply coming and saying that there have been excesses committed by the police. After all there might be only one or two such incidents and it should be possible for anybody to give details of them. So far, I have not received anything.

10th May 1954] [Sri C. Subramaniam]

" As far as Valluvakudi is concerned, it is a contentious matter. As a matter of fact what is happening there is, as my hon. Friend, Sri C. Muthiah Pillai, pointed out, there are only small agriculturist landlords there and they are being victimised, terrorised and coerced so that they may join the Kisan Sangam or whatever Sangam that is just now being sponsored by the Communist Party. Therefore, should we not give protection to the persons, I mean innocent persons, against those who take the law into their own hands and who want to intimidate and coerce the people for a certain purpose? It is only in those circumstances that we have sent the Police. It is not with a view to intimidate or injure or give trouble to any persons that we sent the Police. I may give this much of assurance to the members of the Communist Party and that is if they bring to my notice real facts about any specific instances wherein excesses have been committed by the Police, we will not hesitate to take action against the concerned officer however high he may be or the person complaining, however low he may be. This much of assurance I can give on behalf of Government."

MR. SPEAKER :—" The House will now adjourn till 8 a.m. tomorrow."

The House then adjourned.

V.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.[a]

Amendment to the Madras Motor Vericles Taxation Act, 1931. [*Laid on the table under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931.]

Notification No. 232, *issued with G.O. Ms. No.* 806, *Home, dated* 26*th March* 1954.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[a] Laid on the table on the 8th May 1954.